2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்)

SUBJECT CODE | 21PTM 209

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி):: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : ஜீலை – 2022**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## உரைமரபுகள்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக . சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(Qn. No. 1 - 5)** **(K1)**

1. சிலப்பதிகாரத்திற்குத் தோன்றிய முதல் உரையைக் கண்டறிக.
   அ) அடியார்க்கு நல்லார் உரை ஆ) அரும்பதவுரை
   இ) நாட்டார் உரை ஈ) பெருமழைப்புலவர் உரை
2. பரிமேலழகரின் திருக்குறள் உரைக்கு ‘நுண்பொருள் மாலை’ என்ற பெயரில் உரை எழுதியவர் யார்?
   அ) காரி இரத்தினக் கவிராயர் ஆ) முருகேச முதலியார்
   இ) இராமாநுசாசாரியார் ஈ) வடிவேலு செட்டியார்
3. தமிழ் இலக்கிய உலகில் ‘பேராசிரியர்’ என்ற பெயருடன் விளங்கியவர் எத்தனை பேர்?
   அ) நால்வர் ஆ) ஐவர் இ) அறுவர் ஈ) எழுவர்
4. அடியார்க்கு நல்லார் வாழ்விடமாக ந.சி. கந்தையா பிள்ளை குறிப்பிடும் ஊர் எது?
   அ) மங்கலக்குடி ஆ) தீபங்குடி இ) நீலக்குடி ஈ) இளையான்குடி
5. ‘தமிழ் நயத் தந்தை’ என்ற பட்டத்திற்கு உரியவர் யார்?
   அ) பெரியவாச்சான் பிள்ளை ஆ) நச்சினார்க்கினியர்
   இ) கதிரேசச் செட்டியார் ஈ) பரிமேலழகர்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.** **(K2)**

**(Qn. No. 6 - 10)**

6. இறையனார் அகப்பொருள் சுட்டும் உரையின் நான்கு வகைகள் யாவை?
7. இளம்பூரணரின் நாடும் மரபும் எவை?
8. உரையாசிரியர்களுள் ‘இளவரசர்’ என்று கமில் சுவலபில் யாரைக் குறிப்பிடுகிறார்?
9. ‘தமிழ் மல்லிநாத சூரி’ எனப் போற்றப்பட்ட உரையாசிரியர் யார்?
10. பெரியவாச்சான் பிள்ளை திருப்பாவைக்கு வகுத்த உரை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(CONTD……….2)

**பகுதி – ஆ (5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

11. அ) செய்யுள் வடிவில் தோன்றிய உரைகள் யாவை?

(அல்லது)

ஆ) பண்டைய கால உரையாசிரியர்கள் கையாண்ட நடை வகைகளைச் சுட்டுக.

12. அ) இளம்பூரணர் பலதுறையறிவு உடையவர் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) சேனாவரையரின் தருக்க நூல் புலமைக்குச் சான்று தருக.

13. அ) பேராசிரியர் தம் உரையில் மூலநூலாசிரியரைப் போற்றும் திறத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) பரிமேலழகர் பற்றிக் குறிப்பு வரைக.

14. அ) அடியார்க்கு நல்லார் பாடவேறுபாடு காட்டும் பாங்கைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) நச்சினார்க்கினியர் எழுதிய பத்துப்பாட்டு உரைச் சிறப்பைக் குறிப்பிடுக.

15. அ) கதிரேசச் செட்டியார் சொற்பொருள்களுக்கு விளக்கம் தரும் பான்மையை அவர்தம் திருவாசக உரையினின்று சான்று காட்டி எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியவாச்சான் பிள்ளை எழுதிய நூல்களைப் பட்டியலிடுக.

**பகுதி – இ (4x10=40 மதிப்பெண்கள்))**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16-க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (K4 & K5) கட்டுரைவடிவில் விடைதருக**

16. உரையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.
17. இறையனார் களவியல் உரை வழி நக்கீரரின் உரைநயத்தை விளக்குக.
18. இளம்பூரணர் உரையின் வாயிலாக அறியலாகும் உரை மரபுகளைத் தொகுத்தெழுதுக.
19. பரிமேலழகரின் திருக்குறள் உரைத் திறனை மதிப்பிடுக.
20. அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை வளத்தை விவரிக்க.
21. பெரியவாச்சான் பிள்ளையின் உரையில் வெளிப்படும் நயங்களை ஆராய்க.

---------------------------------